தினமணி

**உணவுப் பணவீக்கம் 9.32 சதவீதமாக சரிவு**

First Published : 14 Oct 2011 01:42:29 AM IST

புது தில்லி, அக்.13 : அக்டோபர் மாதம் 1ம் தேதியுடன் முடிவுற்ற வாரத்தில், நாட்டின் உணவுப் பணவீக்கம் 9.32 சதவீதமாக குறைந்துள்ளது.

செப்படம்பர் மாதம் 23 ம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் உணவுப் பணவீக்கம் 9.41 சதவீதமாக காணப்பட்டது. இது இம்மாதம் 1-ம் தேதியுடன் முடிவுற்ற வாரத்தில், 9.32சதவீதமாக குறைந்துள்ளது.

மத்திய அரசு வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களின்படி, காய்கறிகள் விலை 13.01 சதவீதமாக உயர்ந்துள்ளது. உருளைக்கிழங்கின் விலை 3.79 சதவீதம் அதிகரித்துள்ளது. பால் மற்றும் பால் பொருள்களின் விலை 10.35 சதவீதமும், பழங்களின் விலை 12.19 சதவீதமும் உயர்ந்துள்ளன. முட்டை, இறைச்சி,மீன் போன்ற புரோட்டீன் அடிப்படையிலான உணவுப் பொருள்களின் விலை 9.92 சதவீதம் அதிகரித்துள்ளது. சிறு பயறுகளின் விலை 5.41 சதவீதமும், அரிசி விலை 5.86 சதவீதமும், பயறுகள் விலை 6.87 சதவீதமும் உயர்ந்துள்ளன. வெங்காயத்தின் விலை 10.15 சதவீதமாக குறைந்துள்ளது.

செப்டம்பர் மாதம் 23-ம் தேதியுடன் முடிவுற்ற காலத்தில் 10.84 சதவீதமாக இருந்த அத்தியாவசியப் பொருள்களின் விலை குறியீடு 10.60 சதவீதமாக குறைந்துள்ளது. இழைகள் , எண்ணெய் வித்துகள், தாதுக்கள் போன்ற உணவு அல்லாதப் பொருள்களின் விலை 10.77 சதவீதத்திலிருந்து 9.59 சதவீதமாக குறைந்துள்ளது.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 78.93 அடி**

First Published : 13 Oct 2011 09:32:03 AM IST

ஈரோடு, அக்.12: பவானிசாகர் அணை நீர்மட்டம் புதன்கிழமை 78.93 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 1,443 கன அடி தண்ணீர் வந்தது. ஆற்றில் விநாடிக்கு 900 கன அடி வீதமும், வாய்க்காலில் விநாடிக்கு 2,300 கன அடி வீதமும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணையின் நீர் இருப்பு 15.12 டிஎம்சி.

**தொடக்க வேளாண்மை வங்கியில் வாழைக்காய் ஏலம்**

First Published : 13 Oct 2011 12:56:41 PM IST

திருப்பத்தூர், அக். 12: திருப்பத்தூர் அடுத்த ஆண்டியப்பனூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் புதன்கிழமை வாழைக்காய் ஏலம் நடைபெற்றது (படம்).

வேலூர் மாவட்டத்திலேயே இந்த வங்கியில் மட்டும் தான் வாரந்தோறும் வாழைக்காய், தேங்காய், மஞ்சள், பருத்தி, காய்கறிகள், தானியங்கள் ஏலம் விடப்படுகிறது. புதன்கிழமை நடந்த வாழைக்காய் ஏலத்தில் 250 பேர் கலந்து கொண்டனர். சுமார் ரூ.1 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கு ஏலம் நடந்தது.

தனி அலுவலர் எஸ்.அண்ணாமலை, செயலர் கோ.ரத்தினம், துணைச் செயலர் எஸ்.மாதேஸ்வரன் மற்றும் வியாபாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

---

தினமலர்

உண்மையின் உரைகல்

**உணவுப் பொருள் பணவீக்கம் 9.32 சதவீதமாக குறைந்தது**

அக்டோபர் 14,2011,00:18



புதுடில்லி:நாட்டின் உணவுப் பொருள் பணவீக்கம், அக்டோபர் 1ம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், 9.32 சதவீ தமா கக் குறைந்துள்ளது. இது, இதற்கும்முந்தைய வாரத்தில் 9.41 சதவீதமாக இருந்தது.கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில், ஒரு சில உணவுப் பொருட்களின் விலை குறைந்திருந்தது. இருப்பினும், ஆண்டு கணக்கின் அடிப் படையில், இவற்றின் விலை அதிகரித்து இருந்தது. காய்கறிகள் விலை 13.01 சதவீதம் என்றளவிலும், உருளைக் கிழங்கின் விலை 3.79 சதவீதம் என்ற அளவிலும் உயர்ந் திருந்தது. மேலும்,பால் (10.35 சதவீதம்), பழங்கள்

(12.19 சதவீதம்), முட்டை, இறைச்சி, மீன் (9.92 சதவீதம்) போன்றவற்றின் விலையும் ஆண்டுக் கணக்கில் அதிகரித்து காணப்பட்டது.இருப்பினும்,தானியங்கள் 5.41 சதவீதம் என்ற அளவிலும், அரிசி 5.86 சதவீதம் மற்றும் பருப்பு வகைகள் 6.87 சதவீதம் என்றளவில் குறைந்திருந்தது.மேலும்,வெங்காயத்தின் விலை 10.15 சதவீதம் என்றளவிலும், கோதுமையின் விலை 0.24 சதவீதம் என்றளவிலும் குறைந்திருந்தது. முக்கிய பொருட்களின் விலை, 10.60 சதவீதம் என்றளவில் குறைந்திருந்தது. இது, இதற்கும் முந்தைய வாரத்தில், 10.84 சதவீதம் என்றளவில் இருந்தது. மொத்த விலை குறியீட்டு எண் கணக்கிடுவதில், முக்கிய பொருட்கள் 20 சதவீத பங்களிப்பை கொண்டுள்ளன.உணவு சாராத பொருட்களின் கீழ் இடம்பெற்றுள்ள நூலிழை மற்றும் தாதுப் பொருட்களின் விலை 9.59 சதவீதமாகக் குறைந்திருந்தது. இது, இதற்கும் முந்தைய வாரத்தில், 10.77 சதவீதம் என்ற அளவில் சற்று அதிகரித்து காணப்பட்டது.

**நாட்டின் கோதுமை உற்பத்தி 8.60 கோடி டன்னாக உயரும்**

அக்டோபர் 14,2011,00:15



புதுடில்லி:நாட்டின் கோதுமை உற்பத்தி, வரும் ரபி பருவத்தில்,சாதனை அளவாக, 8.60 கோடி டன்னை எட்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அக்டோபர் மாதம் மத்தியில் இருந்து, ஏப்ரல் மாதம் மத்திய காலம் வரை ரபி பருவமாகும். நடப்பு அக்டோபர் மாதத்தில், இவ்வார இறுதியில், ரபி பருவம் தொடங்க உள்ளது. இப்பருவத்தில், நாட்டின் கோதுமை உற்பத்தி புதியசாதனை அளவை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.இது குறித்து, மத்திய வேளாண் அமைச்சகச் செயலர் பி.கே.பா” கூறிய தாவது: கடந்த ரபிபருவத்தில் (அக்.,-ஏப்.,), நாட்டின் கோதுமை உற்பத்தி, 8.59 கோடி டன் என்றஅளவில் உயர்ந்து, புதியசாதனை படைக்கப்பட்டது.இதையடுத்து, முன்கூட்டிய மதிப்பீட்டின் படி,வரும் ரபி பருவத்தில்,கோதுமை உற்பத்தி, 8.40 கோடி டன்னாக இருக்கும் என்று கணிக்கப்பட்டது. ஆனால், எதிர் பார்த்ததை விட, பருவ மழை நன்கு பெய்துள்ளதால் விளை நிலங்களில் ஈரப்பதம் நன்கு உள்ளது. மேலும், நாட்டில் உள்ள அனைத்து அணைக்கட்டு களிலும், பாசனத்திற்கு தேவையான அளவிற்கு தண்ணீர் உள்ளது. இதற்கு முன், இது போன்ற நிலை ஏற்பட்டதில்லை இத்தகைய அம்சங்கள்

காரணமாக கோதுமை உள்ளிட்ட ரபி பருவ பயிர்களின் விளைச்சல் சிறப்பாக இருக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது. கோதுமையை பொருத்தவரை, வரும் ரபி பருவத்தில், உற்பத்தி, நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விஞ்சி, 8.60 கோடி டன்னாக உயரும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.மேலும், கோதுமை பயிருக்கு தேவையான அளவை விட,சூரிய வெப்பமும் கிடைத்துள்ளதால் பூச்சித் தாக்குதல் போன்ற பிரச்னைகளும் இல்லை. எனவே விவசாயிகள், ரபி பருவத்தில் கோதுமை விதைப்பு பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். ரபி பருவத்தில், முதலில் மத்திய பிரதேசத்தில் கோதுமை நடவுப் பணி தொடங்கும். அடுத்து பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநிலங்களில் இப்பணி நடைபெறும்.ரபி பருவத்தில் வட மாநிலங்களில் கோதுமை, கடுகு, பார்லி, பட்டாணி மற்றும் பருப்பு வகைகள் அதிகளவில்சாகுபடி செய்யப்படுகின்றன.

**சர்க்கரை ஏற்றுமதிக்கு அனுமதி: தீபாவளிக்கு பிறகு முடிவு எடுக்கப்படும்:சரத் பவார் அறிவிப்பு**
அக்டோபர் 14,2011,00:13



புதுடில்லி:நடப்பு 2011-12ம்சந்தைப் படுத்தும் பருவத்தில் (அக்.-செப்.),சர்க்கரை ஏற்றுமதிக்கு அனுமதியளிப்பது குறித்து தீபாவளிக்குப் பிறகு முடிவெடுக்கப்படும் என்று மத்திய வேளாண் துறை அமைச்சர்சரத் பவார் தெரிவித்துள்ளார்.அவர் மேலும் கூறியதாவது: மத்திய அரசு2010-11ம் ஆண்டுசந்தைப்படுத்தும் பருவத்தில், பொது உரிமம் மூலம் மூன்று தவணைகளில் 15 லட்சம் டன்சர்க்கரை ஏற்றுமதிக்கு அனுமதி வழங்கியுள்ளது. இதன்படி, ஏற்கனவே 10 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. மூன்றாவது தவணையின் கீழ் இன்னும் நிர்ணயித்த அளவிற்குசர்க்கரை ஏற்றுமதி செய்யப்படவில்லை. ஏற்றுமதியாகும்பட்சத்தில்,சர்க்கரை ஏற்றுமதிக்கு அனுமதி அளிப்பது பற்றி மத்திய அரசு முடிவெடுக்கும். அதற்குள் தீபாவளி பண்டிகை முடிந்து விடும்.சர்க்கரை உற்பத்தியைப் பொருத்தே, ஏற்றுமதி குறித்து தீர்மானிக்கப்படும்.பண்டிகை காலம் என்பதால், நடப்பு பருவத்தில், கரும்பு அரவைக்கு ஆள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.சென்ற 2010-11ம் பருவத்தில் 2.43 கோடி டன்னாக இருந்தசர்க்கரை உற்பத்தி, நடப்பு 2011-12ம் பருவத்தில் 2.46 கோடி டன்னாக உயரும் என்று உணவு அமைச்சகம் மதிப்பிட்டுள்ளது. எனினும்,

இது 2.5 கோடி டன்னாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சர்க்கரைத் துறை, நடப்பாண்டில் 2.60-2.65 கோடி டன்சர்க்கரை உற்பத்தி இருக்கும் என்று தெரிவித்துள்ளது.கடந்த இரண்டு ஆண்டுகளாகசர்க்கரை உற்பத்தி, தேவையை விட அதிகரித்ததால், சென்ற ஆண்டு 26 லட்சம் டன்சர்க்கரை ஏற்றுமதி செய்ய மத்திய அரசு அனுமதி வழங்கியது. பொது உரிமம் மற்றும் முன்கூட்டிய உரிமத் திட்டம் ஆகியவற்றின் கீழ்,சர்க்கரை ஏற்றுமதிக்கு அனுமதி வழங்கப்பட்டது.இவ்வாறுசரத் பவார் தெரிவித்தார்.

**உடுமலை அருகே மழை வெள்ளத்தில் 10 டன் சின்ன வெங்காயம் நாசம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 14,2011,01:19 IST

உடுமலை : கனமழையால், குளங்கள் உடைந்து அறுவடை செய்யப்பட்ட 10 க்கும் மேற்பட்ட டன் சின்ன வெங்காயம் மழை நீரில் அடித்து சென்றதால் விவசாயிகள் கண்ணீர் வடிக்கின்றனர். உடுமலை அருகே குடிமங்கலம் பகுதியில் பி.ஏ.பி., மற்றும் கிணற்றுப்பாசனத்திற்கு பல ஆயிரம் ஏக்கரில் சின்ன வெங்காயம் பயிரிடப்பட்டிருந்தது. சில நாட்களாக அறுவடை பணிகள் நடந்து வருகிறது. இந்நிலையில், நேற்றுமுன்தினம் இரவு இப்பகுதியில் கனமழை பெய்தது. இரவு 7.00 மணிக்கு துவங்கிய மழை பல மணி நேரம் நீடித்தது. இதனால், அப்பகுதியிலுள்ள குளங்கள் நிரம்பி உடைப்பு ஏற்பட்டது. கொள்ளுப்பாளையம் கிராம தடுப்பணை உடைந்து வெள்ளம் குடியிருப்புகளுக்குள் புகுந்தது. பொள்ளாச்சி-தாராபுரம் ரோட்டில் அதிகளவு வெள்ளம் சென்றதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. கோட்டமங்கலம், வரதராஜபுரம் பகுதியிலிருந்த வெளியேறிய வெள்ள நீர் குடிமங்கலம் கிராம விளைநிலங்களில் புகுந்தது. இதில், அறுவடை செய்யப்பட்டு விளைநிலத்தில் வைக்கப்பட்டிருந்த வெங்காயம் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டன. விவசாயி கோவிந்தராஜ் என்பரது தோட்டத்திலிருந்து 3 டன்னும், அருகிலுள்ள தோட்டங்களிலிருந்து ஏழு டன்னுக்கும் அதிகமான சின்ன வெங்காயம் குளத்திற்கு அடித்து செல்லப்பட்டன. சுற்றுப்பகுதியை சேர்ந்த 200 ஏக்கருக்கும் அதிகமான பரப்பில் விளைநிலங்களில் பல அடி தண்ணீர் தேங்கி வெங்காய பயிர் அழுகியுள்ளது. விவசாயிகள் கூறியதாவது: சின்னவெங்காய சாகுபடியில் ஏக்கருக்கு 50 ஆயிரம் வரை செலவிட்டுள்ளோம். அறுவடை தருணத்தில் பெய்த திடீர் மழை மற்றும் நீர் வழிப்பாதைகள் ஆக்கிரமிப்பு போன்ற காரணங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. வேளாண்துறையினர் ஆய்வு நடத்தி நிவாரணம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்', என்றனர்.

**விவசாய கண்காட்சி துவக்கம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 14,2011,02:01 IST

மதுரை : மதுரை தமுக்கம் மைதானத்தில் மதுரை தமிழ் லயன்ஸ் சங்கம் சார்பில் விவசாய கண்காட்சி நேற்று துவங்கியது. விவசாய பல்கலை முதல்வர் வைரவன் திறந்து வைத்தார். லயன்ஸ் முன்னாள் ஆளுநர் வேல்சாமி, துணை ஆளுநர் தேசாய் மற்றும் நிர்வாகிகள் முருகன், ஜேசுராஜா, தங்கதுரை, நெல்லை பாலு, முத்துகிருஷ்ணன், அரங்கநாதன் பங்கேற்றனர்.நவீன விவசாயத்திற்கு ஏற்ற அனைத்து வகையான உபகரணங்கள் கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன. நெல் சாகுபடிக்கு நாற்று நடவு முதல் அறுவடை வரையிலான இயந்திரங்கள், இயற்கை உரங்கள் மற்றும் பயிர் பாதுகாப்பு, கால்நடை வளர்ப்புக்கு தேவையான ஆலோசனைகளும் "சிடி'களில் விற்பனைக்கு உள்ளன. வீட்டில் பசுமை குடில்கள் அமைத்து, காய்கறிகள் சாகுபடிக்கு தேவையான பயிர்கள், இடுபொருட்கள், வீட்டு உபயோகத்திற்கான பொருட்களும் இடம் பெற்றுள்ளன. கண்காட்சி ஆக., 16 வரை காலை 10 முதல் இரவு 9 மணி வரை நடக்கும். அனுமதி இலவசம்.

**மீன்விலை கிடுகிடு உயர்வு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 14,2011,01:36 IST

ஆத்தூர்:புன்னக்காயலில் கடந்த ஒரு வாரமாக படகுகள் மீன்பிடிக்கச் செல்லாததால் மீன் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.கூடங்குளம் அணுமின்நிலைய பிரச்னை தொடர்பாக தொழிலுக்கு செல்லாமல் இருந்த மீன்பிடி படகுகள் பின்னர் கடந்த சில நாட்களுக்கு முன்பு வரை மீன்பிடிக்கச் சென்று வந்ததால் ஏறி இருந்த மீன்விலை கணிசமான அளவு குறைந்திருந்தது. இதற்கிடையில் தற்போது மீண்டும் கூடங்குளம் அணுமின்நிலையப் பிரச்னை தலைதூக்கி போராட்டம் தொடர்ந்திருப்பதால் கடற்கரையோர கிராமங்களில் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லவில்லை. இதனால் தற்போது மீன் வியாபாரிகள் தூத்துக்குடியிலிருந்து மட்டுமே மீன் எடுத்து விற்பனை செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. பிடித்த உடனேயே ப்ரஷ்ஷாக கிடைத்த மீன்கள் இப்போது ஐஸ் வைத்து விற்கும் நிலையில் சூழ்நிலை தலைகீழாக மாறிவிட்டதால் மீன்விலை தாறுமாறாக ஏறி உள்ளது. மேலும் மீனவர்களின் போராட்டம் தொடர்ந்தால் ஆத்தூர் மற்றும் ஆறுமுகநேரி சுற்றுப்பகுதியில் முற்றிலுமாக மீன் வரத்து நின்று கடும் தட்டுப்பாடு ஏற்படும் வாய்ப்பு அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**விதை வெங்காய விலை உயர்வால் விவசாயிகள் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 13,2011,21:34 IST

ஸ்ரீவில்லிபுத்தூர் : விதை வெங்காயத்தின் விலை உயர்வால், விதை நடவு செய்யும் விவசாயிகள் பாதிக்கின்றனர். அதே நேரத்தில், ஸ்டாக் வைத்திருந்த விவசாயிகள், அதிக லாபத்தால் மகிழ்ச்சியில் உள்ளனர். ஸ்ரீவில்லிபுத்தூர் பிள்ளையார்நத்தம், பூவாணி, மீனாட்சிபுரம் உள்ளிட்ட பகுதிகளில் 500க்கும் அதிகமான ஏக்கர் நிலப்பரப்பில், விவசாயிகள் வெங்காயம் விதை நடவு செய்து வருகின்றனர். கடந்த மாதம் வரை 13 ரூபாய்க்கு விற்பனையான ஒரு கிலோ விதை வெங்காயம், தற்போது 28 ரூபாய்க்கு விற்பனையாகிறது. 24 ரூபாய்க்கு விற்பனையான சமையல் வெங்காயமோ, தற்போதைய மழையால், 30 ரூபாய் வரை விற்பனையாகிறது. இதனால் ஸ்டாக் வைத்திருந்த விவசாயிகள், அதிக லாபத்தால் மகிழ்ச்சியில் உள்ள நிலையில், விதை வெங்காயத்தின் விலை உயர்வால், விதை நடவு செய்யும் விவசாயிகள் பாதித்துள்ளனர். விவசாயி ஏமராஜன் கூறியதாவது: கடந்த மாதம் முதல்,மத்தியரசு வெங்காய ஏற்றுமதியை துவக்கியுள்ளது. இதனால் வெங்காயத்தின் விலை அதிகரித்து வருகிறது. அதிக விலைக்கு வெங்காய விதை வாங்கி நடவு செய்து, ஜனவரியில் அறுவடை செய்யும் போது, குறைவான விலை தான் கிடைக்கும் என்பதால் பெரும்பாலான விவசாயிகள் நடவு செய்ய தயங்குகின்றனர். ஜனவரியிலும் மத்தியரசு ஏற்றுமதியை துவக்கினால், விவசாயிகள் பலன் பெறுவர், என்றார்.

---

தினகரன்

**உணவு பணவீக்கம் 9.32 சதவீதமாக சரிவு**

பதிவு செய்த நாள் : 10/14/2011 0:41:47



புதுடெல்லி : கடந்த 1ம் தேதியுடன் முடிந்த வாரத்தில் உணவு பணவீக்கம் 9.32 சதவீதமாக குறைந்துள்ளதாக மத்திய அரசின் புள்ளி விவரம் தெரிவிக்கிறது. முந்தைய வாரத்தில் 9.41 சதவீதமாக இருந்தது. இதே காலத் தில் எரிபொருள் பணவீக்கம் 14.69லிருந்து 15.10 சதவீதமாக உயர்ந்துள்ளது. முதன்மை பொரு ட்கள் விலை 10.84லிருந்து 10.6 சதவீதமாகி உள்ளது. கடந்த 18 மாதங்களில் 12 தடவை கடன் வட்டியை ரிசர்வ் வங்கி உயர்த்தியது. எனினும், பணவீக்கம் இன்னமும் கட்டுக்குள் வரவில்லை. மாறாக நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகம் குறைந்து வருகிறது.

கடந்த ஆகஸ்ட் மாதத்துக்கான தொழில் உற்பத்தி 4.1 சதவீதம் மட்டுமே அதிகரித்துள்ளது. இது எதிர்பார்க்கப்பட்ட 5 சதவீதத்தைவிட குறைவு ஆகும். தொழில் உற்பத்தி குறைந்து வருவதால் கடன் வட்டியை உயர்த்துவதை ரிசர்வ் வங்கி இத்துடன் முடித்துக் கொள்ள வேண்டும் என தொழில் துறை சார்ந்தவர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

எனினும், நாளை வெளியாக உள்ள செப்டம்பர் மாதத்துக்கான முதன்மை பணவீக்கம் பற்றிய விவரத்தைப் பொறுத்துதான் வட்டியை உயர்த்துவதா, வேண்டாமா என்பதை ரிசர்வ் வங்கி முடிவு செய்யும். இதுகுறித்து முடிவெடுக்க வரும் 25ம் தேதி ரிசர்வ் வங்கி கூட்டம் நடைபெறுகிறது. கடந்த ஆகஸ்ட் மாதத்தில் முதன்மை பணவீக்கம் 9.78 சதவீதமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

**முட்டை விலையில் 10 காசுகள் குறைப்பு**

பதிவு செய்த நாள் : 10/14/2011 0:39:55



நாமக்கல் : நாமக்கல்லில் முட்டை விலை 10 காசுகள் குறைக்கப்பட்டு, ஒரு முட்டை விலை ரூ.2.51ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்று நடந்தது. இதில் பண்ணையாளர்கள், வியாபாரிகள் கலந்து கொண்டனர். இதில் முட்டை விலையை குறைக்க முடிவு செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து ரூ.2.61 ஆக உள்ள

முட்டை விலையில் 10 காசுகள் குறைக்கப்பட்டு ஒரு முட்டை விலை ரூ.2.51 ஆக நிர்ணயம் செய்யப்பட்டது.

கடந்த மாதம் 26ம் தேதி முதல் நாமக்கல் மண்டலத்தில் ஒரு முட்டை விலை ரூ.2.61 ஆக இருந்து வந்தது. ஒரு கிலோ முட்டைக் கோழி விலை ரூ.42 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி விலை ரூ.57 ஆகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டது. பிற மண்டலங்களில் நேற்று நிர்ணயம் செய்யப்பட்ட முட்டை விலை விவரம்: சென்னை & 265, பெங்களூரு & 263, மும்பை & 279, டெல்லி & 280 காசுகள்.

**மிளகு கிலோவுக்கு ரூ.55 உயர்வு**

பதிவு செய்த நாள் : 10/14/2011 0:37:19



சேலம்: கேரளா மற்றும் தமிழகத்தின் ஏலகிரி, ஏற்காடு உள்ளிட்ட மலைப் பகுதிகளில் மிளகு உற்பத்தி செய்யப்படுகிறது. நடப்பு ஆண்டில் போதுமான மழை இல்லாத காரணத்தால் மிளகு விளைச்சல் பாதிப்படைந்தது. கடந்த சில மாதங்களுக்கு முன் மிளகு கிலோவுக்கு ரூ.100 வரை விலை அதிகரித்தது. ஒரு கிலோ மிளகு ரூ.320க்கு விற்பனை செய்யப்பட்டது.

இந்நிலையில், மிளகு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. ஏற்றுமதி துவங்கியதால் உள்நாட்டு தேவைக்கான மிளகு வரத்து குறைந்துள்ளது. மிளகு விலை படிப்படியாக உயரத் துவங்கியுள்ளது. செவ்வாய்ப்பேட்டை மொத்த விற்பனையில் நேற்று ஒரு கிலோ மிளகு ஸி320ல் இருந்து ஸி375ஆக உயர்ந்தது.

# டயர்கள் விற்பனை குறைந்துள்ளதால் இயற்கை ரப்பர் பயன்பாடு 8 சதவீதம் சரிவடைந்தது



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

டயர்கள் விற்பனை குறைந்துள்ளதால், கடந்த செப்டம்பர் மாதத்தில் இயற்கை ரப்பர் பயன்பாடு 8 சதவீதம் சரிவடைந்தது. அதேசமயம், உற்பத்தி அதிகரித்துள்ளது.

வாகன கடன்

வாகன கடனிற்கான வட்டி விகிதம் அதிகரிப்பு மற்றும் பெட்ரோல் விலை உயர்வு உள்ளிட்ட காரணங்களால், சென்ற சில மாதங்களாக கார்கள் விற்பனை குறைந்து வருகிறது. இதன் தாக்கத்தால், டயர்கள் விற்பனை சரிவடைந்துள்ளது. இதனையடுத்து, செப்டம்பர் மாதத்தில் ரப்பர் பயன்பாடு 74,000 டன்னாக குறைந்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே மாதத்தில் 80,500 டன்னாக இருந்தது. ஆகஸ்டு மாதத்துடன் ஒப்பிடும்போதும், ரப்பர் பயன்பாடு 4 சதவீதம் சரிவடைந்துள்ளது.

இறக்குமதி

செப்டம்பர் மாதத்தில் ரப்பர் இறக்குமதி, சென்ற ஆண்டின் இதே மாதத்தைக் காட்டிலும் 73 சதவீதம் சரிவடைந்து 33,477 டன்னிலிருந்து 9,099 டன்னாக குறைந்துள்ளது. நடப்பு நிதி ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் இது 25 சதவீதம் சரிவடைந்து 1,18,535 டன்னிலிருந்து 88,760 டன்னாக குறைந்துள்ளது. இதற்கு உள்நாட்டில் தேவைப்பாடு குறைந்து, உற்பத்தி அதிகரித்து வருவதே காரணமாகும்.

அதேசமயம், செப்டம்பரில் ஏற்றுமதி 17 மடங்கு அதிகரித்து 194 டன்னிலிருந்து 3,313 டன்னாக உயர்ந்துள்ளது. செப்டம்பர் மாதத்துடன் நிறைவடைந்த ஆறு மாதங்களில் ஏற்றுமதி 262

சதவீதம் அதிகரித்து 4,558 டன்னிலிருந்து 16,503 டன்னாக உயர்ந்துள்ளது.

செப்டம்பர் மாதத்தில் ரப்பர் உற்பத்தி 3 சதவீதம் அதிகரித்து 77,500 டன்னிலிருந்து 80,200 டன்னாக அதிகரித்துள்ளது. நடப்பு நிதி ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் இது 4.3 சதவீதம் அதிகரித்து 3,75,250 டன்னிலிருந்து 3,91,400 டன்னாக உயர்ந்துள்ளது.

சாதகமான பருவநிலையால் வரும் மாதங்களிலும் ரப்பர் உற்பத்தி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பு 2011–12–ஆம் நிதி ஆண்டில், ரப்பர் உற்பத்தி 9.02 லட்சம் டன்னாக அதிகரிக்கும் என ரப்பர் வாரியம் தெரிவித்துள்ளது.

உற்பத்தி அதிகரித்து வரும் நிலையில், ரப்பர் தயாரிப்பு நிறுவனங்கள் பல்வேறு சவால்களை சந்தித்து வருகின்றன என கொச்சி ரப்பர் வியாபாரிகள் சங்கத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். கடனிற்கான வட்டி விகித உயர்வு, மூலப்பொருள்கள் விலை அதிகரிப்பு போன்றவற்றால், இத்துறை நிறுவனங்களின் செயல்பாட்டு செலவினம் உயர்ந்துள்ளது.

தொழில்துறை உற்பத்தி

இந்நிலையில், நாட்டின் பொருளாதார வளர்ச்சி, சென்ற ஜூன் மாதத்துடன் நிறைவடைந்த காலாண்டில், கடந்த ஆறு காலாண்டுகளில் இல்லாத அளவிற்கு 7.7 சதவீதமாக குறைந்துள்ளது. தொழில்துறை உற்பத்தி வளர்ச்சியிலும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இதுபோன்ற காரணங்களால் உள்நாட்டில் ரப்பர் பயன்பாடு குறைந்து வருகிறது. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார மந்தநிலையால், சர்வதேச அளவில் ரப்பர் விற்பனை குறைந்து வருகிறது. இதனையடுத்து, கடந்த ஆறு மாதங்களில் இல்லாத அளவிற்கு ரப்பர் விலை குறைந்துள்ளது.

பாதிப்பு

ஆக, பொருளாதார மந்தநிலையால், அனைத்து துறைகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டு வருகிறது. செப்டம்பர் மாதத்தில் ரப்பர் பயன்பாடு குறைந்துள்ள நிலையில், கடந்த ஆறு மாதங்களில் இது 1.5 சதவீதம் அதிகரித்து 4,69,050 டன்னிலிருந்து 4,76,215 டன்னாக அதிகரித்துள்ளது. நடப்பு 2011–12–ஆம் நிதி ஆண்டில் ரப்பர் பயன்பாடு 9.88 லட்சம் டன்னாக உயரும் என ரப்பர் வாரியம் முன்னறிவிப்பு செய்துள்ளது. இறக்குமதி 1.20 லட்சம் டன்னாகவும், ஏற்றுமதி 50,000 டன்னாகவும் இருக்கும் என தெரிவித்துள்ளது.

## அக்.1–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் உணவு பொருள் பணவீக்கம் 9.32 சதவீதமாக குறைந்தது



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

உருளைக்கிழங்கு, வெங்காயம், பருப்பு வகைகள் விலை குறைவால், அக்டோபர் 1–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், உணவு பொருள் பணவீக்கம் 9.32 சதவீதமாக சற்று குறைந்துள்ளது. மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் இப்பணவீக்கம் முந்தைய வாரத்தில் 9.41 சதவீதமாக இருந்தது. இதனுடன் ஒப்பிடும்போது 0.09 சதவீதம் குறைந்துள்ளது.

வெங்காயம்

ஓராண்டு கால அடிப்படையில் வெங்காயம் விலை 10.15 சதவீதமும், கோதுமை விலை 0.24 சதவீதமும் குறைந்துள்ளது. முந்தைய வாரத்துடன் ஒப்பிடும்போது, முட்டை, இறைச்சி, மீன் உள்ளிட்ட அசைவ உணவு பொருள்கள் விலை உயர்வு விகிதம் 10.33 சதவீதத்திலிருந்து 9.92 சதவீதமாக குறைந்துள்ளது. காய்கறி மற்றும் பருப்பு வகைகள் விலை முறையே 14.88 சதவீதம் மற்றும் 7.54 சதவீதத்திலிருந்து 13.01 சதவீதம் மற்றும் 6.87 சதவீதமாக குறைந்துள்ளது. அனைத்து பொருள்களுக்கான பொது பணவீக்கத்தை கணக்கிடுவதில் 14.91 சதவீத பங்களிப்பை பெற்றுள்ள எரிபொருள் பணவீக்கம் 14.69 சதவீதத்திலிருந்து 15.10 சதவீதமாக உயர்ந்துள்ளது. கடந்த ஜூலை மாதத்தில் 9.22 சதவீதமாக இருந்த பொது பணவீக்கம், ஆகஸ்டில் கடந்த 13 மாதங்களில் இல்லாத அளவிற்கு 9.78 சதவீதமாக உயர்ந்துள்ளது. பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் பாரத ரிசர்வ் வங்கி, கடந்த 18 மாதங்களில் முக்கிய கடன்களுக்கான வட்டியை 12 முறை உயர்த்தியது. இதனையடுத்து, சென்ற சில மாதங்களாக தொழில்துறை உற்பத்தி வளர்ச்சி சரிவடைந்து வருகிறது.

ரிசர்வ் வங்கி

இந்நிலையில், ரிசர்வ் வங்கி இம்மாதம் 25–ந் தேதி வெளியிடும் பணக் கொள்கை ஆய்வு அறிக்கையில், முக்கிய கடன்களுக்கான வட்டியை மேலும் உயர்த்துமா என்ற கேள்வி எழுந்துள்ளது. செப்டம்பர் மாதத்திற்கான பொது பணவீக்கம் குறித்த விவரத்தை இன்று மத்திய

புள்ளியியல் துறை வெளியிடுகிறது. இதனைப் பொறுத்து ரிசர்வ் வங்கி வட்டி விகிதங்கள் குறித்து முடிவு செய்யும் என பொருளியல் நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## உணவு தானிய கிடங்குகளை நவீனப்படுத்த மத்திய அரசு திட்டம்

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

உணவு தானிய சேமிப்பு கிடங்குகளின் கொள்ளளவை அதிகரிக்கவும், நவீனப்படுத்தவும் மத்திய அரசு திட்டமிட்டுள்ளது என மத்திய உணவு துறை அமைச்சர் கே.வி.தாமஸ் கூறியுள்ளார்.

கருத்தரங்கு

சர்வதேச அரிசி ஆராய்ச்சி நிலையம் ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கு ஒன்றில் பேசிய அவர், “உணவு பாதுகாப்பு மசோதா எதிர்வரும் பாராளுமன்ற குளிர் கால கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்படும். அதன்படி, கிராமப்புறங்களில் 75 சதவீதம் பேருக்கும், நகர்ப்புறங்களில் 50 சதவீதம் பேருக்கும் மானிய விலையில் உணவு தானியங்கள் வழங்குவது கட்டாயமாக்கப்படும். இத்திட்டத்திற்கு 6.10 கோடி டன் – 6.20 கோடி டன் உணவு தானியங்கள் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போது சுமார் 6 கோடி டன் தானியங்களை சேமிக்கும் அளவு வசதி உள்ளது. இதனை அடுத்த சில ஆண்டுகளில் மேலும் 1.50 கோடி டன் அளவுக்கு அதிகரிக்கவும், அதனை நவீனப்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உதாரணமாக சீனாவில் உள்ளது போன்ற நவீன சேமிப்பு கிடங்குகள் அமைக்கப்படும்” என்று தெரிவித்தார்.

அவர் மேலும் கூறும்போது, “அறுவடை முதல் சரக்கு போக்குவரத்து வரையில் ஏராளமான உணவு தானியங்கள் வீணாவதை உடனடியாக தடுத்து நிறுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். உணவு தானிய பொது விநியோக முறை கணினிமயமாக்கப்பட்டு, வீணாவது மற்றும் கடத்தப்படுவது போன்றவை கட்டுப்படுத்தப்படும். இவ்வகையில், பல மாநில அரசுகள் குடும்ப அட்டை குறித்த தகவல்களை கணினி தகவல்களாக மாற்றம் செய்துள்ளன. மேலும், உணவு தானியங்களை கொண்டு செல்லும் வாகனங்களில் ஜி.பி.எஸ். கருவிகள் பொருத்தப்பட்டு அவற்றின் நடமாட்டம் கண்காணிக்கப்படும்” என்றார்.

உற்பத்தி

2010–11 பருவத்தில் 24.16 கோடி டன் உணவு தானியங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. நடப்பு 2011–12 பருவத்தில் உற்பத்தி 24.50 கோடி டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## நடப்பு பருவத்தில் நெல் கொள்முதல் விலை அதிகரிக்கப்பட வாய்ப்பு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நெல் சந்தைப்படுத்துதல் பருவம் என்பது அக்டோபர் முதல் செப்டம்பர் வரையிலான காலமாகும். இம்மாதம் தொடங்கியுள்ள புதிய பருவத்தில் நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை (கொள்முதல் விலை) அதிகரிக்கப்பட வாய்ப்புள்ளது என மத்திய உணவுத் துறை அமைச்சர் கே.வி. தாமஸ் தெரிவித்தார்.

உலக அளவில் நெல் உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. நடப்பாண்டு கரீஃப் பருவத்தில் (ஜூலை–அக்டோபர்) 8.70 கோடி டன் அரிசி உற்பத்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கனவே மத்திய அரசின் கையிருப்பில் 2.27 கோடி டன் அரிசி உள்ளது. உற்பத்தி, கையிருப்பு அதிகரிக்க உள்ள நிலையில், நெல் ஆதரவு விலையை அதிகரிப்பதன் மூலம் பணவீக்கத்தை கட்டுக்குள் கொண்டு வர முடியும் என மத்திய அரசு நம்புகிறது. தற்போது ஒரு டன் நெல்லுக்கு விவசாயிகளுக்கு ரூ.1,080 விலை கொடுக்கப்படுகிறது. நம் நாட்டில், நடப்பு 2011–12 வேளாண் பருவத்தில் (ஜூலை–ஜூன்), ஒட்டுமொத்த அளவில் உணவு தானியங்கள் உற்பத்தி 24.50 கோடி டன்னாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, கடந்த 2010–11 பருவத்தை விட 1.4 சதவீதம் அதிகமாக இருக்கும். இதனால் அரிசி, கோதுமை அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்பட வாய்ப்புகள் உருவாகும்.

## மசினகுடி பகுதியில் செண்டுமல்லி மலர் சாகுபடியில் ஆர்வம் காட்டும் ஆதிவாசி மக்கள்



மசினகுடி அருகே பயிரிடப்பட்ட செண்டு மல்லி மலர்களை அறுவடை செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள ஒரு ஆதிவாசி பெண்.

*மசினகுடி, அக்.14–*

*செண்டுமல்லி மலர் சாகுபடியில் மசினகுடி பகுதி ஆதிவாசி மக்கள் அதிக ஆர்வம் காட்ட தொடங்கி உள்ளனர்.*

*ஆதிவாசி மக்கள்*

*மசினகுடி பகுதியில் உள்ள ஆனைக்கட்டி, சிறியூர், சொக்க நள்ளி, செம்மநத்தம், வாழைத் தோட்டம், மாவனல்லா, பொக்காபுரம், பூதநத்தம் போன்ற பகுதிகளில் ஆதிவாசி மக்கள் வசித்து வருகின்றார் கள்.*

*ஒரு கால கட்டத்தில் காட்டுக்குள் சென்று தேன் உள்பட வன பொருட்களை சேகரித்தும், கால்நடைகளை வளர்த்தும் வாழ்க்கை நடத்தி வந்த இவர்கள் கடந்த சில ஆண்டுகளாக விவசாயத் திலும் ஈடுபட்டு வருகின்ற னர்.*

*மலர் சாகுபடி*

*இவர்கள் தங்களது நிலங்களில் பீன்ஸ், பஜ்ஜி மிளகாய், உருளைக்கிழங்கு, வாழை, ராகி போன்ற விவசாய பயிர்களை சாகுபடி செய்து வருகின்றனர்.*

*இந்த நிலையில் தற்போது ஏராளமான விவசாயிகள் மலை தோட்ட காய்கறி களை செய்து வந்தாலும், இந்த ஆண்டு முதல் மலர் சாகுபடியிலும் ஈடுபட்டு வருகின்றார்கள்.*

குறிப்பாக சிறியூர், ஆனைக் கட்டி, சொக்கநள்ளி போன்ற பகுதிகளில் உள்ள ஆதிவாசி விவசாயிகள் தங்களது நிலங்களில் முதன் முறையாக செண்டு மல்லி மலர் செடிகளை பயிரிட்டுள்ள னர். அவ்வாறு பயிர் செய்யப்பட் டுள்ள செண்டு மல்லி செடி களில் மழையின் காரணமாக நல்ல மகசூல் கிடைத்துள் ளது.

நல்ல லாபம்

இங்கு விளைவிக்கப்படும் செண்டுமல்லி வாசனை திரவியங்கள் தயாரிப்பதற் காகவும், பூ மாலைகள் கட்ட வும் நீலகிரி மாவட்டத் தின் பிற பகுதிகளுக்கும், ஈரோடு, சத்தியமங்கலம், மேட்டுப் பாளையம், கோவை போன்ற சமவெளி பகுதிகளுக்கும் கொண்டு செல்லப்படுகிறது. குறிப்பாக வியாபாரிகளே விளை நிலங்களுக்கு வந்து செண்டு மல்லிகளை வாங்கி செல்வதால் ஆதிவாசி விவ சாயிகள் நல்ல லாபம் பெற்று வருகின்றனர். இதன் மூலம் தற்போது ஒரு கிலோ செண்டு மல்லி பூவிற்கு ரூ.4 கிடைக் கிறது. பண்டிகை நாட்களில் செண்டு மல்லி கூடுதல் விலைக்கு விற்பனையா கிறது.

ஒரு காலத்தில் வனப்பகுதிக் குள் சென்று, வனப் பொருட் களை சேகரிப்பதன் மூலம் வாழ்க்கை நடத்தி வந்த ஆதி வாசி மக்கள் தற்போது விவசா யத்தில் தீவிரமாக ஈடுபட்டு மலை காய்கறிகளை பயிர் செய்வதுடன், இது போன்ற மலர் சாகுபடியிலும் ஈடுபட்டு உள்ளது வரவேற்கத்தக்க விஷ யமாக உள்ளது. இவர்களுக்கு அரசு மூலம் மேலும் விவசாயம் செய்ய தேவையான உதவிகளும் செய்யப்பட்டால் இவர் களுடைய வாழ்க்கை தரம் மேலும் உயர வாய்ப்பு உள்ளது.

## கூடலூர் பகுதியில் தொடரும் அவலம்:

## போதிய உரங்கள் கிடைக்காமல் விவசாயிகள் கடும் அவதி

கூடலூர், அக்.14–

கூடலூர் பகுதியில் போதிய உரங்கள் கிடைக் காமல் விவசாயிகள் கடும் அவதி அடைந்து வரு கின்றனர். இத னால் வெளி மார்க்கெட் டில் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய அவலநிலை காணப்படுகிறது.

விவசாய பணிகள்

நீலகிரி மாவட்டம் மலை மாவட்டம் மட்டுமின்றி விவசாய மாவட்டம் எனவும் அழைக்கப்படுகிறது. ஊட்டி, குன்னூர், கோத்தகிரி பகுதியில் மலைப்பிரதேச காய்கறிகள் விளைவிக்கப்படுகின்றன. கூடலூர், பந்தலூர் தாலுகா வில் மலைப்பிரதேச காய்கறி கள் மட்டுமின்றி சமவெளி பிரதேச காய்கறிகளும் விளை விக்கப்படுகின்றன. குறிப்பாக நெல், வாழை விவசாயம் அதிகளவு நடைபெற்று வருகிறது.

இதனால் இந்த பகுதி விவ சாயிகள் பயிர்களுக்கு தேவை யான உரங்களை கூடலூர் கூட்டுறவு

உரக்கிடங்கில் மானிய விலையில் பெற்று வந்தனர். கடந்த காலகட்டங் களில் விவசாயிகளுக்கு தேவை யான உரங்கள் வினியோகம் செய்யப்பட்டு வந்தது. இதனால் விவசாய பணிகள் பாதிப்பின்றி நடைபெற்றன.

உரங்கள் இல்லை என கைவிரிப்பு

கூடலூர் பகுதி விவசாயி களுக்கு தேவையான தழை, மணி, சாம்பல் சத்துக்கள் கொண்ட உரங்கள், நுண் ணூட்ட உரங்கள், பூச்சி கொல்லி மருந்துகள், நுண்ணூ யிர் உரங்கள் விவசாயிகளுக்கு தங்கு தடையின்றி கிடைத்து வந்த காலம் மாறி தற்போது உரங்கள் இல்லை என கைவிரிக்கும் காலம் வந்து விட்டதாக விவசாயிகள் புலம்பி வருகின்றனர்.

கூடலூர் கூட்டுறவு உரக் கிடங்கில் விவசாயிகளுக்கு தேவையான சூபர்பாஸ்பேட், பொட்டாஸ் உள்ளிட்ட உரங் கள் கிடைக்காமல் உள்ளது. இது சம்பந்தமாக கூட்டுறவு உரக்கிடங்கை விவசாயிகள் அணுகினால் 2 மூடை மட்டும் தான் வழங்க முடியும் என கூறி அலுவலர்கள் கைவிரித்து விடுவதாக விவசாயிகள் புகார் தெரிவித்து வருகின்றனர். சரியான நேரத்தில் உரங்கள் கிடைக்காத தால் பயிர்களின் மகசூல் பாதிக்கப்படும் என விவசாயி கள் கவலை அடைந்துள்ள னர்.

இது குறித்து தமிழக முதல்– அமைச்சர், வேளாண் அமைச் சர், மாவட்ட கலெக்டருக்கு சிறுவிவசாயிகள் புகார் மனு அனுப்பியும் நடவடிக்கை எடுக்கப்பட வில்லை என கூறப்படுகிறது. எனவே சம்பந் தப்பட்ட துறையினர் விவசாயி களுக்கு தேவையான உரங்கள் கிடைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.